LANKA Sathosa
ලංකා සතොස லங்கா சதொச

# வெற்றிடங்கள்

Ministry of Trade, Commerce, Food Security and Cooperative Development

நாடெங்கும் உள்ள சமூகங்களுக்கான தினசரி வாழ்வை சிறந்ததாக்குவது. சிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் (SMEs) தங்களது வணிகங்களை வளர்த்துக் கொள்ள நம்பகமான மற்றும் சிக்கலற்ற தளத்தை வழங்குவதன் மூலம் அவற்றை ஆதரிப்பதில் நாங்கள் பெருமிதம் கொள்கிறோம். அதேவேளையில், விவசாயிகள் மற்றும் வர்த்தகர்களுக்கு இடையில் குறைந்தபட்ச தடைகளுடன் வலுவான மற்றும் நேரடி தொடர்புகளை உருவாக்குகிறோம். நேர்மை, வெளிப்படைத்தன்மை மற்றும் பரஸ்பர மரியாதை ஆகியவற்றை வழிகாட்டும் கொள்கைகளாகக் கொண்டு, எங்கள் பணியாளர்களும் அனைத்து பங்குதாரர்களும் ஒன்றிணைந்து வளர்ச்சி பெற்று வெற்றி அடையக்கூடிய ஆற்றல்மிக்க மற்றும் ஆதரவான பண்பாட்டை நாம் உருவாக்கி வளர்க்கிறோம்.

இலங்கை முழுவதும் உள்ள சமூகங்களுக்கு சேவை செய்வது, சிறிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்களை (SMEs) ஆதரிப்பது மற்றும் வளர்ச்சியை முன்னெடுத்துச் செல்வது என்ற எங்கள் நோக்கத்தில் பங்களிக்க, மேற்கூறிய பதவியில் இணைந்து லங்கா சதொச லிமிடெட் குடும்பத்தின் ஓர் அங்கமாக வர திறமையான நபர்களை நாங்கள் தேடுகிறோம்.

## 1. நிறைவேற்றுனர் - நிதி

**பணிப் பெறுப்பு**

- செலுத்த வேண்டிய கணக்குகள், பெற வேண்டிய கணக்குகள் மற்றும் பொது பேரேடு நடவடிக்கைகள் உள்ளிட்ட தினசரி நிதி பரிவர்த்தனைகளை நிர்வகித்தல்.
- துல்லியமான மற்றும் காலத்திற்கேற்ற நிதி அறிக்கையிடலை உறுதி செய்வதற்காக நிதி அறிக்கைகள், ஒப்பீட்டு அறிக்கைகள் மற்றும் ஆதரவு அட்டவணைகளைத் தயாரித்தல்.
- நிறுவனக் கொள்கைகள் மற்றும் நிதி விதிமுறைகளுக்கு இணக்கத்தை உறுதி செய்யும் வகையில் பணப்புழக்கம், வங்கி ஒப்பீடுகள் மற்றும் பணம் செலுத்தும் செயல்முறைகளை கண்காணித்தல்.
- வணிக தீர்மானங்களை ஆதரிப்பதற்காக வரவு-செலவுத் திட்டமிடல், முன்னறிவிப்பு, நிதி பகுப்பாய்வு மற்றும் சட்டபூர்வ கணக்காய்வு தேவைகளில் உதவுதல்.
- துல்லியமான நிதிப் பதிவுகளை பராமரித்தல் மற்றும் கணக்கியல் தரநிலைகள், வரிவிதிப்பு தேவைகள் மற்றும் உள்ளக கட்டுப்பாடுகளுக்கு இணக்கத்தை உறுதி செய்தல்.

**தகைமைகள்**

***வெளிவாரி அபேட்சகர்களுக்கு: கீழுள்ள 1 அல்லது 2***

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட நிதி முகாமைத்துவம்/ கணக்கியல்/ வர்த்தக நிர்வாகம்/ முகாமைத்துவம்/ பொது நிர்வாகம்/ வணிக துறையில் இளமாணிப் பட்டம்
2. பதவிக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

***உள்ளக அபேட்சகர்களுக்கு (கீழுள்ள I அல்லது II)***

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
II. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் MA 1-2 தரம் II பிரிவு ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள குறியீடு மற்றும் அளவு:** (சம்பள குறியீடு MA -3 2025 மற்றும் சம்பள அளவு ரூபா (53,940/= - 10 x ரூபா 800/= - 11 x Rs.1,190/= - 10 x ரூபா 1,320/= - 5 x 1,350/= - ரூபா 94,980/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026:** அடிப்படைச் சம்பளம்: 49,831.00 வாழ்க்கைச் செலவு: 17,800.00,

**நியமனத்தின் தன்மை:** EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் நிரந்தர அடிப்படை

## 2. நிறைவேற்றுனர் - தர உத்தரவாதம்

**பணிப் பொறுப்பு**

- நிறுவனத்தின் தரத் தரநிலைகள், கொள்கைகள் மற்றும் ஒழுங்குமுறை தேவைகளுக்கு இணக்கத்தை உறுதி செய்வதற்காக தர ஆய்வுகள் மற்றும் கணக்காய்வுகளை மேற்கொள்ளுதல்.
- தயாரிப்புகள் மற்றும் செயற்பாடுகளின் தரத்தை கண்காணித்து மதிப்பீடு செய்தல், இணக்கமின்மைகளை கண்டறிந்து திருத்தம் மற்றும் தடுப்பு நடவடிக்கைகளை பரிந்துரைத்தல்.
- நிர்ணயிக்கப்பட்ட நடைமுறைகளுக்கு இணங்க துல்லியத்தை உறுதி செய்து தர உத்தரவாதம் தொடர்பான ஆவணங்கள், பதிவுகள் மற்றும் அறிக்கைகளை பராமரித்தல்.
- தர மேம்பாட்டு முயற்சிகளை நடைமுறைப்படுத்தவும் தொடர்ச்சியான செயல்முறை மேம்பாட்டை ஊக்குவிக்கவும் உள்ளக பிரிவுகளுடன் ஒருங்கிணைத்தல்.
- நிலையான தரத் தரநிலைகளை பராமரிக்க தர உத்தரவாதக் கொள்கைகள், நடைமுறைகள் மற்றும் தரப்படுத்தப்பட்ட செயற்பாட்டு நடைமுறைகளை உருவாக்குதல், மதிப்பாய்வு செய்தல் மற்றும் செயற்படுத்தல் தொடர்பில் உதவுதல்.

**தகைமைகள்**

**வெளி அபேட்சகர்களுக்கு: கீழுள்ள 1 அல்லது 2**

1. ப.மா.ஆ. மூலம் அங்கீகரிக்கப்பட்ட இரசாயனவியல்/ உணவு விஞ்ஞானம்/ விவசாயம்/ உயிரியல் விஞ்ஞானம்/ ஊட்டச்சத்து/ வணிக துறையில் இளமாணிப் பட்டம்
2. பதவிக்கு தொடர்புடைய அங்கீகரிக்கப்பட்ட தொழில்முறை பட்டய நிறுவனம் ஒன்றின் இடைநிலை பரீட்சையில் சித்தி பெற்றிருத்தல்.

**உள்ளக அபேட்சகர்களுக்கு (கீழுள்ள I அல்லது II)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
II. பதவிக்கு தொடர்புடைய விடயப் பரப்பில் MA 1-2 தரம் II பிரிவு ஒன்றில் ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல்.

**வயது:** 22 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள குறியீடு மற்றும் அளவு:** (சம்பள குறியீடு MA -3 2025 மற்றும் சம்பள அளவு ரூபா (53,940/= - 10 x ரூபா 800/= - 11 x Rs.1,190/= - 10 x ரூபா 1,320/= - 5 x 1,350/= - ரூபா 94,980/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026:** அடிப்படைச் சம்பளம்: 49,831.00, வாழ்க்கைச் செலவு: 17,800.00,

**நியமனத்தின் தன்மை:** EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் நிரந்தர அடிப்படை

## 3. கணக்கு உதவியாளர்

**பணிப் பெறுப்பு**

- துல்லியமான நிதிப் பதிவுகள், கணக்கியல் பரிவர்த்தனைகள் மற்றும் தொடர்புடைய ஆதார ஆவணங்களை பராமரிப்பதில் உதவுதல்.
- விலைப்பட்டியல்கள், பணப் பரிவர்த்தனைகள், ரசீதுகள் மற்றும் வங்கி ஒப்பீடுகளை காலத்திற்கேற்ற வகையில் தயாரித்து செயற்படுத்துதல்.
- நிதி அறிக்கைகள், அட்டவணைகள் மற்றும் மாத இறுதி கணக்கு முடிப்பு நடவடிக்கைகளைத் தயாரிப்பதில் ஆதரவு வழங்குதல்.
- கணக்கியல் பதிவுகளை முறையாகப் பராமரித்து, நிறுவனக் கொள்கைகள் மற்றும் கணக்கியல் நடைமுறைகளுக்கு இணக்கத்தை உறுதி செய்தல்.
- கணக்கியல் தொடர்பான கேள்விகளுக்கு தீர்வு காணவும் தினசரி நிதிச் செயற்பாடுகளுக்கு ஆதரவு வழங்கவும் உள்ளக பிரிவுகள் மற்றும் வெளி தரப்புகளுடன் ஒருங்கிணைத்தல்.

**தகைமைகள்**

**வெளி அபேட்சகர்களுக்கு: கீழுள்ள 1 அல்லது 2**

1. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் க.பொ.த. (உ/த) பரீட்சையில் (பொதுப் பரீட்சை தவிர) மூன்று பாடங்களில் சித்தி பெற்றிருத்தல்.
   - நிதி தொடர்பான பதவிகளில் முன் அனுபவத்துடன் சேர்த்து, கணக்கியல்/ நிதி (ACCA, CIMA, CASL) துறையில் தொழில்முறை தகைமை மற்றும் தொடர்புடைய பட்டம் ஒன்றுடனான அபேட்சகர்கள் தனித்துவமான அனுகூலத்தை பெறுவர்.

**உள்ளக அபேட்சகர்களுக்கு (கீழுள்ள I அல்லது II)**

I. மேலுள்ள வெளிவாரி அபேட்சகர்களுக்குத் தேவையான தகைமைகளைப் பெற்றிருத்தல்.
II. க.பொ.த. (சா/த) பரீட்சையில் சிங்களம்/ தமிழ் மற்றும் கணிதம் உட்பட நான்கு பாடங்களுக்காக திறமைச் சித்திகளுடன் ஒரே அமர்வில் ஆறு பாடங்களில் சித்தி பெற்றிருத்தல் மற்றும் ஆரம்ப நிலை ஊழியர் பிரிவின் கீழ் நிரந்தர பதவி ஒன்றில் குறைந்தது ஐந்து (05) ஆண்டுகள் திருப்திகரமான சேவையை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள குறியீடு மற்றும் அளவு:** (சம்பள குறியீடு MA 1-1 - 2025 மற்றும் சம்பள அளவு ரூபா (46,220/= - 10 x ரூபா 540/= - 7x ரூபா 630/= - 12x ரூபா 1,080/= - 12 x ரூபா 1,280= - Rs. 84,350/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026:** அடிப்படைச் சம்பளம்: 43,312.00 வாழ்க்கைச் செலவு: 17,800.00,

**நியமனத்தின் தன்மை:** EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் நிரந்தர அடிப்படை

## 4. களஞ்சியத்திற்காக களஞ்சிய உதவியாளர்

**பணிப் பெறுப்பு**

விநியோகக் களஞ்சியங்களுக்குள் பல்வேறு விநியோகம் மற்றும் விற்பனைச் செயற்பாடுகளைச் செயற்படுத்துதல், சரக்கு இருப்புகளைப் பராமரித்தல், மற்றும் அது தொடர்பான கணினி அடிப்படையிலான பதிவேடுகளைத் தயாரித்துப் புதுப்பித்தல். மேலும், பொதுவான நிறுவனப் பணிகளைச் செய்வதற்கும், நிர்வாகத்தால் ஒதுக்கப்படும் ஏனைய பணிகளைச் செய்வதற்கும் பொறுப்புடையவர்.

**தகைமைகள்**

**உள்ளக மற்றும் வெளி அபேட்சகர்களுக்கு: கீழுள்ள 1**

1. க.பொ.த. (சா/த) பரீட்சைக்காக தோற்றியவர்கள்

- ஆவணங்களை தயார்படுத்தலுக்கு தொடர்புடைய (MS Word / Excel) கணினி அறிவில் தேர்ச்சியுடன் சேர்த்து தொடர்புடைய முன் அனுபவத்தைப் பெற்ற அபேட்சகர்கள் தனித்துவமான அனுகூலத்தை பெறுவர்.

**வயது:** 18 வயதுக்கு குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

**சம்பள குறியீடு மற்றும் அளவு:** (சம்பள குறியீடு PL - 1 - 2025 மற்றும் சம்பள அளவு ரூபா (40,500/= - 10 x Rs.450/= - 10x Rs.490/= - 7x Rs.540/= - 15 x ரூபா 590 = - ரூபா 62,530/=)

**சம்பளம் மற்றும் ஏனைய கொடுப்பனவு 2026:** அடிப்படைச் சம்பளம்: 38,488.00 வாழ்க்கைச் செலவு: 17,800.00,

நியமனத்தின் தன்மை: EPF மற்றும் ETF இற்கான தகைமையுடன் நிரந்தர அடிப்படை

**பொருத்தமான அபேட்சகர்கள் பின்வருவனவற்றையும் பெற்றிருத்தல் வேண்டும்:**

- இதனையொத்த திறனில் தொடர்புடைய துறையில் (சில்லறை) அனுபவத்தைப் பெற்றிருத்தல்.
- அரச நிறுவனத்தில் அனுபவம் இருப்பது கூடுதல் முன்னுரிமையாக கருதப்படும்.
- சிறந்த பகுப்பாய்வு திறன், பிரச்சினை தீர்க்கும் திறன் மற்றும் ஒழுங்கமைப்பு திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.
- வலுவான தலைமைத்துவ பண்புகள் மற்றும் சிறந்த ஆளிடை / தொடர்பாடல் திறன்களை கொண்டிருத்தல் வேண்டும்.
- சிறந்த தகவல் தொழில்நுட்ப திறன்களை வெளிப்படுத்தக்கூடியவராக இருத்தல் வேண்டும்.
- பல்துறை அணிகளை வழிநடத்தி, நிர்வகிக்கும் நிரூபிக்கப்பட்ட திறனைக் கொண்டிருத்தல் வேண்டும்.

**அனைத்து விண்ணப்பதாரரும்:**

- இலங்கை பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
- பதவியின் பணிகளை மேற்கொள்வதற்கு உடல் மற்றும் உளத் தகைமையை பெற்றிருத்தல் வேண்டும்.
- சிறந்த பண்புடையவராக இருத்தல் வேண்டும்.

தேவையான தகைமைகள், அனுபவம் மற்றும் திறன்களை பெற்றுள்ள அபேட்சகர்களுக்கு தொடர்புடைய கல்வி மற்றும் தொழில்முறை சான்றிதழ்களின் பிரதிகளுடன் சேர்த்து தமது சுயவிபரக் கோவையை 2026 ஜூலை 25 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் பதிவுத் தபால் அல்லது மின்னஞ்சல் மூலம் சமர்ப்பிப்பதற்கு கோரப்படுகின்றனர். விண்ணப்பங்களை குறிப்பிட்ட இறுதித் திகதிக்குள் பிரதி பொது முகாமையாளர் - மனித வளங்கள் மற்றும் நிர்வாகம், லங்கா சதொச லிமிடெட், இல. 27, 4ஆவது மாடி, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு-02 என்ற முகவரிக்கு அல்லது vacancies@lankasathosa.org என்ற மின்னஞ்சல் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

**தலைவர்**
**லங்கா சதொச லிமிடெட்**
**இல. 27, CWE செயலகக் கட்டிடம், வொக்ஷோல் வீதி, கொழும்பு-02.**